


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.9.2023) பொது மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் வேலூர் மாவட்டம், மேல்மொணவூர், இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் நடைபெற்ற விழாவில், 13 மாவட்டங்களில் 19 இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாம்களின் பழைய குடியிருப்புகள் மற்றும் கட்டப்பட்ட புதிய குடியிருப்புகளின் புகைப்படத் தொகுப்பினை பார்வையிட்டார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஜெகத்ரட்சகன், து.மு.கதிர் ஆனந்த், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி.நந்தகுமார், பா.கார்த்திகேயன், திருமதி அமலு விஜயன், திருமதி ஆ. தமிழரசி, வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில்குமார், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை செயலாளர் க.நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு துறை ஆணையர் திருமதி ஜெசிந்தா லாஸரஸ், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### அமெரிக்காவில் விபத்தில் உயிரிழந்த
## இந்திய மாணவிக்கு பட்டம்!

சியாட்டில், செப். 18 –


அமெரிக்காவில் விபத்தில் உயிரிழந்த இந்திய மாணவிக்கு பட்டமளிக்க முடிவு செய்திருக்கிறோம் என அவர் படித்த பல்கலை கழகத்தின் வேந்தர் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் நார்த்ஈஸ்ட் பல்கலை கழகத்தில் படித்து வந்த மாணவி ஜானவி கண்டுலா (வயது 23). ஆந்திர பிரதேச மாநிலத்தில் இருந்து படிப்பதற்காக அவர் அமெரிக்கா சென்றுள்ளார். இந்நிலையில், இந்த ஆண்டு ஜனவரியில் தெரு ஒன்றை கடந்து செல்லும்போது, சியாட்டில் நகர போலீஸ் வாகனம் ஒன்று அவர் மீது மோதிவிபத்துஏற்படுத்தியது. இதில், அவர் உயிரிழந்து உள்ளார்.

இந்நிலையில், அந்த பல்கலை கழகத்தின் வேந்தர் கென்னத் ஹென்டர்சன் கூறும்போது, கண்டுலா மறைவை அடுத்து, அவருக்கு பட்டமளிக்க திட்டமிட்டு இருக்கிறோம். இதனைஅவருடைய குடும்பத்திற்குவழங்கஇருக்கிறோம் என கூறியுள்ளார்.

அடுத்த வாரம் பல்கலைக்கழக வளாகத்தில், நல்லிணக்கம் சார்ந்து எங்களுடையமாணவர்கள்ஒன்றாக கூடக்கூடிய நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது என்றும் அதுபற்றிய பல்கலை கழகத்தின் அறிக்கை தெரிவிக்கின்றது.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; தி.மு.க. அழிந்துவிடும், காணாமல் போகும் என்றெல்லாம் தமிழக பா.ஜ.க. தலைவர் ஒருவர் புலம்பிக் கொண்டு திரிகிறாரே; அவரை என்ன செய்ய ?

**பெரியதம்பி : ஆமாம் தம்பி; அவரை யாரும் ஒன்றும் செய்ய வேண்டாம்.**

**“அவருடைய நாக்கு அழுகிவிடும்” என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஒருவர் விடுத்திருக்கும் சாபத்தையே பா.ஜ.க. தலைவருக்குச் சமர்ப்பித்து விடலாம்.**

# ஞாலமெலாம் விளங்குக நற்பெரியார் பிறந்தநாள்!



பெரியார்போல் இங்கொரு
பெரும்புரட்சி யாளரைச்
சரித்திரம் கண்டதில்லை!
தன்மானம் பகுத்தறிவு
உரியவை மக்கட்கென்று
ஒருவரும் விண்டதில்லை
சரியென்றால் சாற்ற அவர்
தயக்கமும் கொண்டதில்லை
நெரித்திடும் சனாதன
நெடுங்காலக் குப்பையை
எரித்திடும் தீயாக
இறுதிவரை ஒளிர்ந்தவர்!
பொரிகிளப்பிச் சமுதாயப்
புரட்சியில் கிளர்ந்தவர்!
உரிமையாம் விடுதலை
உணர்ச்சியில்
வளர்ந்தவர்!
புரிநூலார் நடுங்கிடப்
புயலாகக்கிளர்ந்தவர்!கரித்தாலும்
தம்கருத்தைக் கலங்காமல்
உரைத்தவர்!
பிரித்தாளும் நால்வருணப்
பித்தலாட்டம் ஒழித்தவர்!

மரியாதை வேண்டுமென
மக்களுக்கு உணர்த்தியவர்;
சரிநிகர் சமமெனச்
சாதித்துக் காட்டியவர்;
உரித்தவெங் காயத்தில்
ஒன்றுமே இலாததுபோல்
அரிசிவன் கதைகளால்
ஆவதுதான் எதுவுமில்லை;
புரிநூலார் உருப்படிகள்
புரட்டுகள் :திருட்டுகள்
நரியாளர் தந்திரங்கள்;
நாஉளறும் மந்திரங்கள்;
பெரிதாகக் கடவுளெனும்
பித்தலாட்டப் பேச்சுகள்;
வரிவரியாய்ப் பார்த்தாலும்
வடித்துவைத்த பொய்களெனப்
புரிந்துகொண்ட பெரியார்தாம்
புரட்சிப்பண் மீட்டுகின்றார்!

சாதிகள் ஆரியச்
சதிகளாம் விதிகளாம்
நீதியிலாச் சேதிகளாம்
நெடுங்கொடுமைச்
சூதுகளாம்
ஆதியிலே இல்லாத
ஆரியர்செய் தீதுகளாம்
ஊதியே பெரிதாக்கி
உலவவிட்ட ஏதங்கள்
வேதியர் சூழ்ச்சியென
விளக்கிய பெரியாரே
நாதியிலா மக்கட்கு
நம்பிக்கை நாயகராம்!

கடவுளரும் மதங்களும்
கட்டாயம் மனிதர்கள்
தொடக்கூடா தெனப்பெரியார்
சொன்னதனால் அல்லவோ
மடத்தனங்கள் குறைந்தன;
மாயைகள் அகன்றன!
இடர்நீக்கக் கடவுள்தான்
இங்கெழுந்து வருவாரென்று
அடர்பொய்கள் மெல்லமெல்ல
அகம்விட்டுப் போயின!

உடலுழைப்பும் அறிவாய்வும்
உண்டானால் மட்டுமே
கடமைகள் நிறைவேறும்;
கடுந்துயர்கள் கரைந்தோடும்;
உடைமைகள் உருவாகும்;
உள்ளந்தான் திருவாகும்!
புடம்போட்ட தங்கமாம்
புரட்சியாளர் பெரியார்தாம்
வடம்போட்டுத் தடம்போட்டு
வலியவே இழுத்ததனால்
அடம்போட்ட அறியாமை
அற்றுத்தான் விழுந்தது!

பார்ப்பனம் என்னுமொரு
படுநஞ்சு பரவியதால்
சீர்கெட்டுச் சமுதாயம்
சிதைந்தது; மேலுமதன்
ஆர்ப்பாட்டம் மிகுந்ததால்
அறிவுமானம் அகன்றன!
தீர்ப்புரைத்துப் பெரியார்தாம்
தீயாக எழுந்ததனால்
போர்ப்பறை கொட்டியதால்
புரட்சித்தீ கொளுத்தியதால்
வேர்கெட்டுச் சனாதனம்
விழுதுடன் வீழ்ந்தது!
நார்நாராய்க் கிழிந்தது;
நச்சுலா ஒழிந்தது!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

யார்கெட்டுப் போனால்தான்
எமக்கென்ன என்றிராமல்
ஊர்விட்டு ஊர்ஊராய்
ஒவ்வொரு நாள்நாளாய்ச்
சீர்திருத்தம் பேசியே
சிந்திக்கத் தூண்டினார்!
பார்போற்றும் பெரியார்தாம்
பகுத்தறிவு தன்மானம்
நேர்கொள்ள வேண்டுமென
நெஞ்சுறைக்க நிகழ்த்தினார்!

பெரியாரின் எழுச்சிக்குப்
பின்னர்தான் நாட்டிலே
பரிதாப நிலையிலே
பள்ளத்தில் உழன்றவர்கள்
உரிமையை இழந்தவர்கள்
ஒடுங்கியே கிடந்தவர்கள்
மரியாதை அழிந்தவர்கள்
மாக்களாய் நடந்தவர்கள்
சரிநிகர் மறந்தவர்கள்
தாழ்ந்துபணிந் திருந்தவர்கள்
நரிகளைத் தொழுதவர்கள்
நாளெல்லாம் அழுதவர்கள்

வரிப்புலியாய்ப் பாய்ந்தனர்
வன்களிறாய்ப் பிளிறினர்
அரிமாவாய் முழங்கினர்
அடலேறாய் நிமிர்ந்தனர்
கருவமிக்க மேற்சாதிக்
கயமையை மீறினர்
தெருவிலே நடந்தனர்
செருப்பணிந்து கடந்தனர்

பொருதிட வைக்கத்தில்
புகுந்தநற் பெரியார்தாம்
கருதியது முடிக்குமுன்
காந்தியார் தடையிட்டும்
தெருவிலே நடையிட்டார்;
சிறையிலே அடைபட்டார்;
இருகால்கள் விலங்கிட்டும்
எஃகாக விளங்கிட்டார்!
வரவழைத்து நற்றுணையை
வைக்கத்துப் போராட்டம்
பரபரப்பு ஆக்கினார்;
படும்இழிவை நீக்கினார்!

அண்ணா என்னும்ஓர்
அறிஞரவர் தளபதியாய்
நண்ணியதே பெரியார்க்கு
நல்லெழுச்சி ஆயிற்று!
எண்ணியவை நிறைவேற்ற
எழுத்துரையும்
பேச்சுரையும்
அண்ணாபோல்
ஆகுமா? ஆற்றலர்அவர்பின்னே
எண்ணிலார் எழுந்தனர் ;
எங்கங்கும் பரப்பினர்!
திண்ணிய கலைருடன்
திகழ்ந்தபே ராசிரியர்
கண்ணிய நாவலர்
கருத்துரைகள் நிகழ்த்தினர்!
எண்ணிய முடித்திடும்
எழச்சிகொள் தளபதி
கண்ணேந்தும் வீரமணி
கட்டியம் கூறுகின்றார்!
மண்ணேந்தி வீழ்வார்கள்
மதமென்று
வாழ்வோர்கள்!

காலமெலாம் போராடிக்
கடைசிவரை தளராமல்
ஓலமெலாம் போவதற்கு
உரிமைகள் மேவுதற்குச்
சூலமின்றி வாளுமின்றிச்
சுக்குமாந் தடியுமின்றி
வேலுமின்றிக் கருத்துப்போர்
விளைத்தவர்; வெற்றியைச்
சாலவும் கண்டவர்;
சரித்திரம் கொண்டவர்!
நாலுதிசை கொண்டாடும்
நற்பிறந்த நாளின்று!
மேலுமேலும் பிறந்தநாள்
மேவுகவே!
ஞாலமெலாம் பகுத்தறிவு
தன்மான நாயகன்
கோலமே விளங்குகவே!
கொள்கையே வெல்லுகவே!

# வைணவத் திருக்கோவில்களுக்கு - ஆன்மிகச் சுற்றுலா!
## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

*சென்னை, செப்.18-*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை சுற்றுலாத்துறையுடன் ஒருங்கிணைந்து புரட்டாசி மாதத்தை முன்னிட்டு தமிழ்நாட்டில் உள்ள பிரசித்தி பெற்ற வைணவ திருக்கோயில்களுக்கு பக்தர்கள் ஆன்மிகச் சுற்றுலா அழைத்துச் செல்ல ஏற்பாடுகளை செய்துள்ளதெனவும், ஆன்மிக அன்பர்கள், சுற்றுலா பயணிகள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.*

*2022-2023 ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்பில்“தமிழ்நாட்டில் உள்ள பிரசித்தி பெற்ற அம்மன் திருக்கோயில்களுக்கும், வைணவத் திருக்கோயில்களுக்கும் முக்கிய விழா நாட்களில் ஆன்மிகப் பயணம் செல்ல சுற்றுலாத்துறையுடன் ஒருங்கிணைந்து ஏற்பாடுகள் செய்யப்படும்” என்று அறிவிக்கப்பட்டதை செயல்படுத்தும் வகையில், கடந்தாண்டு ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் வைணவத் திருக் கோயில்களுக்கும் ஆன்மிக சுற்றுலா அழைத்துச்செல்லப் பட்டனர். இது பக்தர்களிடையே மிகுந்த வரவேற்பைப்பெற்றது.*

*மேலும், நடப்பாண்டில் சுற்றுலாத்துறையுடன் ஒருங்கிணைந்து கடந்த மாதம் அம்மன் திருக் கோயில்களுக்கு ஆன்மிக சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டது. அதனைத் தொடர்ந்து, எதிர்வரும் புரட்டாசி மாதத்தில் சென்னை, திருச்சி, மதுரை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களைத் தலைமையிடமாக கொண்டு புகழ் பெற்ற வைணவத் திருக்கோயில்களுக்கு குறைந்த கட்டணத்தில் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் ஆன்மிகச் சுற்றுலா அழைத்துச் செல்லும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் முன்பதிவுகள் செய்யப்பட்டு வருகின்றன.*

*சென்னையில் இப்பயணத்தின் முதல் திட்டத்தில் திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி திருக்கோயில், பெசன்ட்நகர், அஷ்டலெட்சுமி திருக்கோயில், திருவிடந்தை, நித்யகல்யாண பெருமாள் திருக்கோயில், மாமல்லபுரம், ஸ்தலசயன பெருமாள் திருக்கோயில், சிங்கப்பெருமாள் கோயில், பாடலாத்ரி நரசிம்மர் திருக்கோயில், திருநீர்மலை, நீர்வண்ண பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கும்,*

*இரண்டாவது திட்டத்தில் திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி திருக்கோயில், திருநீர்மலை, நீர்வண்ணப்பெருமாள் திருக்கோயில், திருமுல்லைவாயில், பொன்சாமி பெருமாள் திருக்கோயில், திருவள்ளூர், வைத்திய வீரராகவப் பெருமாள்திருக்கோயில், திருப்பெரும் புதூர், ஆதிகேசவபெருமாள்திருக்கோயில், பூந்தமல்லி, வரதராஜபெருமாள் திருக்கோயில் உள்ளிட்ட திருக் கோயில்களுக்கும் பக்தர்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.*

*இந்த இரண்டு திட்டங்களிலும் பக்தர்களுக்கு கட்டணமில்லா சிறப்பு தரிசனம் செய்து வைக்கப்பட்டு, திருக்கோயில் பிரசாதம், திருக்கோயில்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய கையேடுடன் மதிய உணவும் வழங்கப்படுகிறது.*

*இந்த ஆன்மிகச்சுற்றுலாவில் பங்கேற்க விரும்பும் பக்தர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் www.ttdconline.com இணையதளத்தில் பதிவு செய்தல் வேண்டும்.*

*மேலும், இது தொடர்பாக விவரங்களுக்கு 044 - 2533 3333, 2533 3444 என்ற தொலைபேசி எண்களிலும், கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 4253 1111 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு விவரங்களை தெரிந்துக்கொள்ளலாம். ஆகவே, ஆன்மிக அன்பர்கள், சுற்றுலா பயணிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளலாம் என இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.*

## சென்னையில் கொட்டி தீர்த்த கனமழை

*சென்னை: செப். 18 -*

*சென்னையில் பெரும்பாலான பகுதிகளில் இடியுடன் கூடிய கனமழை கொட்டி தீர்த்தது. சென்னையில் காலை முதலே வெயில் சுட்டெரித்தது வந்தது. இதன்பிறகு மதியம் 3.30 மணி அளவில் இடி, மின்னலுடன் கூடிய கன மழை பெய்தது.*

*இடைவிடாத மழை காரணமாக கத்திப்பாரா பாலத்தின் சுரங்கப்பாதை, தி.நகர் மேட்லி சுரங்கப் பாதை பகுதியில் மழை நீரானது தேங்கியது.*

*அதே வேளையில் சென்னை மற்றும் புறநகர் பகுதியான நுங்கம்பாக்கம், அண்ணாநகர், முகப்பேர், அம்பத்தூர், கிண்டி, பாடி, ஆவடி, மடிப்பாக்கம், வேளச்சேரி, மாம்பலம், அசோக் நகர், மீனம்பாக்கம் உள்ளிட்ட இடங்களில் கன மழை பெய்தது.*

*இந்நிலையில் அடுத்து இரண்டு நாட்களுக்கு மிதமான மழை முதல் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

# பிரதமர் மோடி பிறந்த நாள்!
## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, செப். 18 –

பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:

பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துகள்.

தாங்கள் நீண்ட ஆயுளுடனும், நல்ல உடல் நலத்துடனும் திகழ வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.